# ஜன்மாந்தரம்

அல்லது

# இராமதாசர் உபதேசம்.

(An extract from *Sundari Manoharan*, an interesting Tamil Novel.)

"வேதாந்த போதினி", "சுந்தரி மனோகரன்"

முதலான

நூல்களியற்றிய

பே. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

(இதன் விலை அணா 2.)

23 JUN 19

SHIYALI.

MADRAS:

PRINTED AT THE TAYLOR WORKS.

1906.

# முன்னுரை

கணவனையே தெய்வமென்று பாவிக்கும் உத்தம பதிவிரதாதர்மமும், சீலமிகு ஏகபத்தினி விரதமும், அடக்கம், பொறுமை தெய்வபக்தி, குரு விசுவாஸம், ஜீவகாருண்யம் முதலாய குணவிசேஷங்களும், நிலையிலா உலகத்தின் தன்மை, நித்தியனான பகவானது பெருமை, சிதாபாச ஜீவனது நிலைமை ஆகிய விவைகளை நன்கு தெளிவிக்கும் தத்துவ ஞானமும், இப்பூவுலகில் மேன்மேலும் விர்த்தியாகி எங்கும் பரந்து தழைத் தோங்கவேண்டுமென்னும் கருத்துடன் எழுதப்பட்டு, யாவராலும் புகழப்பட்டுவரும் **சுந்தரி மனோகரன்** என்னும் தமிழ் வினோதகதைப் புத்தகத்தில் அடங்கியிருக்கும் இராமதாசர் உபதேசத்தை ஜன்மாந்தரம் என்னும் பெயரிட்டு, சகல ஜனங்களும் படித்தானந்திக்கவேண்டுமென்னும் அவாவுடன் அதை இச்சிறிய புத்தக ரூபமாக வெளியிடலாயிற்று. இம்மாதிரி விஷயங்கள் அநேகம் நிறைந்துள்ளதும், இன்னும் அடிக்கடி அடங்கா மகிழ்ச்சியையும் அதியாச்சரியத்தையும் உண்டுபண்ண வல்ல இலௌகீக தந்திரம் யுக்தி உபாயங்கள் பல அடங்கியுள்ளதுமான சுந்தரி மனோகரன் என்னும் தமிழ் நாவல் எல்லோருக்கும் மிக்க நன்மையைப் பயக்குமென்பது திண்ணம்.

**மானேஜர்.**

சென்னை, திராவிட புத்தக டிபோ.

# முக்கிய கவனிப்பு.

இப்புத்தகமும், "சுந்தரி மனோகரன்" என்னும் கதையும் வேண்டுபவர்கள் சென்னை, பூவிருந்தவல்லி ரோட், நெ. 52. திராவிட புத்தக டிபோ மானேஜரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜன்மாந்தரம்

அல்லது,

# இராமதாசர் உபதேசம்.

---

ஆனந்தபுரி யரண்மனைக்கு வந்த இராமதாசர் சந்திரசூடன் சங்கதியையும், மனோகரன் நிலைமையையும், சந்திரசேகரர், இரதி, சுந்தரி ஆகிய இவர்களுடைய விசனத்தையும் நன்றாய் அறிந்து அவ்விடத்திலேயே சிலநாள் தங்கினார். மந்திரியும் சுலோசனரும் மனோகரனைக் குறித்துக் கூறுவது அவருக்குத் தெரிய வந்தது. அவர் அடிக்கடி சந்திரசேகரரிடத்து இதமாகப்பேசி அவரது விசனத்தை யாற்றுவது வழக்கம். ஒருநாள் சாயந்திரம் இராமபக்தர் பிரபுவினிடத்துத் தனியே யுட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் பிரபுவானவர், "இராமதாசரே! என்னென்ன துன்பங்களெல்லாம் மனிதனுக்குண்டாகின்றன பாருங்கள். இத் துன்பங்களை யுண்டுபண்ணும் கருணாநிதியான பகவானுடைய கருத்து யாதோ?" என்று கேட்டார். அதற்கு இராமதாசர், "பிரபுவே! நன்றாய்ச் சொன்னீர்கள். நமக்குத் துன்பத்தை யுண்டுபண்ணத்தானா பகவானிருக்கிறார்? அதுதானா அவர் தொழில்? அதற்காகவா அவரைக் கருணாநிதியென்று சொன்னீர்கள்? நமக்குத் துன்பத்தை யுண்டுபண்ணுவது பகவானானால், இன்பத்தைக் கொடுப்பவர் யார்?" என்று வினவினார்.

"இராமபக்தரே! அந்தப் பகவானே தான் இன்பத்தையுங் கொடுக்கிறார்."

"சரி. ஒரே பகவான் இன்பத்தையும் துன்பத்தையுங் கொடுக்கிறாரென்று கூறிய பிரபுவே! இன்பத்தை யாருக்குக் கொடுக்கிறார்? துன்பத்தை யாருக்குக் கொடுக்கிறார்?"

"சிலருக்கு இன்பத்தையும் சிலருக்குத் துன்பத்தையும் கொடுக்கிறார்."

"பிரபுவே! அவர் ஏதோ பட்சபாதமாயிருப்பதாகக் காண்கிறதே. ஏன் எல்லாருக்கும் இன்பத்தை யாவது அல்லது துன்பத்தை யாவது கொடுக்கக் கூடாது?"

"அவர் பிரியம்போல நடத்துகிறார் இராமதாசரே."

"இருக்கட்டும். அந்தப் பிரியமேன் எல்லாரிடத்திலும் ஒரே மாதிரியாகயில்லை?"

"எல்லா மனிதர்களும் ஒரேமாதிரியாக இல்லாமையினாலேயோ?"

"இப்போது சொன்னது சரி பிரபுவே. சனங்கள் ஒரே மாதிரியாக யில்லாமல் வெவ்வேறு மாதிரியாக இருப்பதால், இன்ப துன்பங்களைக் கொடுக்கவல்ல பகவானுடைய பிரியமும் ஒரே மாதிரியில்லாமல் வேறுபட்டிருக்கிறது. அதாவது மனிதர்களுடைய நடவடிக்கையைப் பார்த்து அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கவாறு இன்பதுன்பங்களைப் பகவான் கொடுக்கிறாரென்று ஏற்படுகிறதல்லவா?"

"ஆமாம், மனிதர்களே காரணம் போலிருக்கே?"

"ஆட்சேபனை யென்ன? இன்ப துன்பங்களை யடைவதற்கு மனிதர்கள் நடவடிக்கை அல்லது யோக்கியதை காரணமாக விருக்க, பகவான் மீது பழியைப் போடுவானேன்? அது நியாயமா பிரபுவே?"

"நீங்கள் சொல்லுவது சரியே. பேசும்பொழுது இப்படித்தான் முடிகிறது. ஆனால் உலகத்தில் யோக்கியர்களுக்கெல்லாம் நன்மையும் அயோக்கியர்களுக்கெல்லாந் தீமையும் உண்டாகக் காணோமே பக்தரே? அநேக சாதுக்கள்படுந் துயரத்தைச் சொல்லி முடியாது. பல துஷ்டர்கள் ஒருவிதத் துன்பமு மில்லாமல் சுகத்தை யனுபவிக்கிறார்கள். நான் பிரத்தியட்சமாகப் பார்த்திருக்கிறேன். நீங்களே பாருங்கள் இராமதாசரே! நானிதுவரையில் ஒருவருக்கும் ஒரு கெடுதியும் செய்ததில்லை. எனக்கேன் துன்பம் நேரிட்டிருக்கிறது?"

"இதற்கு வேறு நியாயம் கண்டு பிடிக்கவேண்டும். நாமிப்போது பார்ப்பதைக் கொண்டு பகவான் தன்னிஷ்டப் பிரகாரம் செய்கிறாரென்றும், சாதுக்களுக்குத் துன்பத்தையும் துஷ்டர்களுக்கு இன்பத்தையும் கொடுக்கிறா ரென்றும் கூறுவது குற்றம். பிரபுவே! முன்னே தீர்மானித்த வண்ணம் மனிதர்களுடைய நடவடிக்கைக்குத் தக்கபடியே இன்பதுன்பங்கள் நேரிடுகின்றன. நடவடிக்கையென்பது ஒருவர் செய்யுங் கர்மம். அவரவர் கர்மத்திற்குத் தக்கவாறு சுகதுக்கங்கள் சம்பவிக்கின்றன. நல்ல கர்மஞ் செய்தால் சுகமும் தீயகர்மஞ்செய்தால் துக்கமும் உண்டாகிறது. செய்யுங் கர்மம் எத்தன்மைத்தோ அத்தன்மைத்தே பலனும். நன்மையிலிருந்து தீமை விளையாது. தீமை நன்மையைக் கொடுக்காது. இது திண்ணம். பூசணிவிதை நட்டால் பாவற்காய் காய்க்காது. இது அனுபவமான சங்கதி. மறுத்தற்கியலாது. சுகந்தரத் தகுவனவெல்லாம் சற்கருமம். துக்கம் பயப்பனவெல்லாம் துஷ்கருமம். ஆகவே சற்கருமம் துஷ்கருமம் காரணங்கள்.

சுகதுக்கங்கள் முறையே காரியங்கள். காரணமில்லாமல் ஒரு காரியமுண்டாகாது. எது நேர்ந்தபோதிலும் அதற்கென்ன காரணமென்று நாம் கேட்பது வழக்கம். ஒரு காரியத்திற்குக் காரண மறிகிறவரையில் நமக்கு மனச்சமாதான முண்டாகிறதில்லை. காரணங் கண்டபின் இந்தக் காரியம் நடந்தது நியாயமென் ஒத்துக்கொள்ளுகிறோம். ஏன்? காரணத்திலுள்ளது காரியத்திலுமிருப்பதால்தான். அப்படியே காரியத்திலுள்ளதைக் காரணத்திலும் பார்க்கிறோம். மண் காரணம். குடம் காரியம். மண்குடம் என்றாலும் குடம் மண் என்றாலும் ஒன்றுதான். வித்தியாசமில்லை. அதுபோல பிரபுவே! ஒருவனை சுகியென்போமானால் அவனை சற்கருமஞ் செய்தவனென்றும், இன்னொருவனை துக்கியென்போமானால் அவனை துஷ்கருமஞ் செய்தவனென்றும் நாம் அறியவேண்டாமோ? இதற்கு ஆட்சேபனையில்லையே. ஆதலின் இதனால் பெறப்பட்டதென்னயெனின், மனிதர்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கு அவரவர்கள் செய்த கருமங்களே காரணம். சரிதானே இது பிரபுவே?"

"நீங்கள் கூறியது சரியே. ஆனாலும் ஒரு சந்தேகம். இப்போது சற்கருமங்களைச் செய்து சாதுக்களென்று பெயர்பெற்றவர்கள் துக்கத்தைப் பலனாக அனுபவிப்பதற்கு எப்போது துஷ்கருமங்களைச் செய்தார்கள்? அப்படியே தீவினையே புரிவதால் துஷ்டர்கள் என்று பட்டம்பெற்றவர்கள் சுகமாக வாழ்வதற்கு சற்கருமம் புரிந்தது எக்காலத்திலோ?"

"சரியான கேள்வி பிரபுவே. இதற்கு மறுமொழி சொல்ல கஷ்டமில்லை. எப்போது செய்தார்

களென்றால் அவர்களுடைய முன் சன்மங்களிலே தான்.”

“இராமதாசரே! இதுகாறும் தாங்கள் கூறியதை யறிந்தேன். முன்னும் பின்னும் சன்மங்கள் உண்டென்ப தெப்படி?”

“இது நியாயமான கேள்வி. சன்மாந்தரங்கள் உண்டு வென்பதை நமக்கு அனுபவமாயுள்ள சில திருஷ்டாந்தங்களாலே நிரூபிக்கிறேன் கேளுங்கள். ஒரு பெருங்கருணைத் திருவருளால் சிருஷ்டிக்கப்பட்ட ஐம்பூதச் சேர்க்கையால் உண்டான தேகத்தைப் பெற்ற மனிதர்களெல்லாரும் ஒருவிதமான ஸ்திதியிலில்லாமல் சிலர் சம்பூத்துடையவர்களாயும், சிலர் தரித்திரராயும், சிலர் சர்வாதிகாரமுள்ள இராசாக்களாயும், சிலர் அடிமைகளாயும், சிலர் எல்லா அவயவங்களும் நன்றாய்ப் பொருந்தி தேகப்பொலி வுடையவர்களாகவும், சிலர் கையோ அல்லது காலோ இல்லாத முடவராயும், செவிடராயும், குருடராயும், ஊமையாயும், சிலர் புத்திமான்களாயும், சிலர் மூடராயும் இருக்கிறார்கள். ஏன் இவ்வளவு ஏற்றத்தாழ்வுள்ள வித்தியாசங் களிருக்க வேண்டும்? உதாரணமாக நொண்டியாயுள்ள ஒரு மனிதனைக் குறித்து விசாரிப்போம் அவன் கால் ஏன் நொண்டியாயிருக்கிறது? இந்த நொண்டி சரீரத்தை அவனே யெடுத்துக் கொண்டானா? அல்லது வேறு யாராவது அவன் காலை நொண்டி யாக்கினார்களா? அவனிஷ்டப்படி சரீரம் எடுத்துக்கொள்ளுவதாயிருந்தால் அவன் நல்ல சரீரத்தை யெடுத்துக்கொள்ளுவானே யல்லாமல் நொண்டி சரீரத்தை யெடுத்துக் கொள்ளமாட்டான். அவன் சரீரம் மாதாவினுடைய கர்ப்பத்திலுண்டானபடியால், கர்ப்பத்தில் பிரவேசித்து அவன்

காலை நொண்டியாக்க வேறொரு மனிதனு லாகமாட்டாது. அவன் கால் நொண்டியாவானேன்? அவன் செய்தகுற்றம் அல்லது பாவத்திற்கு அவனுக்குக் கர்ப்பத்திலேயே சிட்சை கொடுக்கப்பட்டதென்று ஏற்படுகிறதல்லவா? கர்பத்திலேயே சிட்சை கொடுக்கப்பட்டதால், அக்கர்ப்பத்தில் அவன் பிரவேசிக்கு முன்னமேயே அவன் பாவம் செய்திருக்கவேண்டு மல்லவா? முன்னமேயே பாவஞ்செய்ய அவனுக்கொரு சன்மமிருக்க வேண்டுமே? அப்படி யில்லாவிட்டால் அவன் பாவம்செய்த தெப்போது? பாவமே செய்யாதிருந்தால் அவனுக்கு சிட்சையேது? அவன்கால் நொண்டியாக வேண்டிய நியாயமுமில்லை. இதனுல் அவனுக்கு முன் சன்மமுண்டென்று சுலபமாய் ஊகிக்கலாம். முன்னே சன்மமுண்டென்றுல் இனி ஏன் சன்மமிருக்கக் கூடாது? இருக்கலாம்.

இன்னொரு திருஷ்டாந்தம் பாருங்கள் பிரபுவே. சற்றேறக்குறைய ஒரேவயதுள்ள மாணுக்கர்கள் ஒன்றுகூடி ஒரு உபாத்தியாயரிடத்து வித்தை கற்கப்போகிருர்கள். அவர்களுக் கெல்லாம் ஒரு விஷயத்தைக் குறித்து ஒரேகாலத்தில் ஒரேவிதமாய் அவ்வுபாத்தியாயர் போதிக்கினும், அப்பிள்ளைகளெல்லாரும் அவ்விஷயத்தை ஒரேவிதமாய் அறிகிறதில்லை. ஒருவன் விஷயத்தைப் பூரணமாய் அறிகிருன். மற்றொருவன் கொஞ்சங்குறைவா யறிகிருன். இன்னொருவன் சொன்ன விஷயத்தைவிட்டு வேறோரு விஷயஞ் சொன்னதாக நிச்சயிக்கிருன். இன்னுமொருவன் சொன்னவிஷத்தையறிய வகையிலாது மற்றொருவனைக் கெஞ்சிக் கேட்கிருன். இன்னும் சிலமாணுக்கர்கள் விஷயத்தையறிய ஆவலும் முயற்சியுமற்றுச். சும்மாயிருந்து, உபாத்

SHIYALI.

தியாயரிடத்துப் பாடம்படிக்கும் இச்சண்டாளத்தொழில் நம்மை எப்போது விட்டொழியு மென்று ஏக்கமுற்றிருக்கிறார்கள். எல்லாருக்கும் பொதுவாய் போதித்த விஷயத்தைக் குறித்து அவர்களைப் பரிட்சை செய்யுங் காலத்தில் எல்லாரும் ஒருவிதமான சமாதானத்தைச் சொல்லவேண்டியது நியாயமாயிருக்க, ஒருவர் சொல்லுகிறமாதிரி மற்றொருவர் சொல்லாமல் ஏற்றக்குறைவாயும் சம்பந்த மில்லாததாயுமுள்ள சமாதானங்களை அவர்கள் கூறுகிறார்கள். இதற்கென்ன காரணம்? எல்லாரும் சமவயதுடையவர்கள். கேட்டவிஷயமொன்று. போதித்தவரும் ஒரே உபாத்தியாயர். ஏன் பிள்ளைகள் பலவிதமான மறுமொழிகளைக் கூறவேண்டும்? இதற்குச் சமாதானம் அப்பிள்ளைகளினுடைய புத்திபரிபக்குவத்தில் வித்தியாச மிருக்கிறதென்று தான் சொல்லவேண்டும். புத்திபரிபக்குவ மடையத்தானே அவர்கள் உபாத்தியாயரிடத்துச் சென்றார்கள், இதற்குமுன் அவர்கள் புத்தி பரிபக்குவமடைந்ததெப்போது என்று கேட்பின், அவரவர்களுடைய முன் சன்மங்களிலென்றுதான் கூறவேண்டும். அதெப்படித் தெரியுமெனின், முன்சன்மமில்லாவிட்டால், உபாத்தியாயரிடத்துச் செல்லும்போது அவர்களுடைய புத்தியின் நிலைமை ஒரேமாதிரியாயிருக்கும். ஆதலால் விஷயத்தை ஒரே அளவாக எல்லாரும் கிரகித்து வித்தியாசமில்லாமல் ஒரே சமாதானத்தை அவர்களெல்லாருங் கூறுவார்கள். அப்படிக்கில்லாமையினால் அவர்கள் புத்திநிலைமை ஒரேமாதிரியாக இருக்கவில்லையென்றும், அதற்குக் காரணம் அவர்கள் முன்சன்மங்களில் உழைத்த உழைப்பென்றும் பெறப்படுகிறது.

இன்னுமொரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு வாலிபன் பார்ப்பதற்கு அதிசுந்தரனுயும் நல்லாடையாபரணங்களை யணிந்து அதிக கம்பீரமாய் இரண்டு குதிரைகள் பூட்டிய நல்ல வண்டியிலுட்கார்ந்துகொண்டு சீமானுய், முன்னே இரண்டு வேலையாட்கள் ஓடவும், பின்னே இரண்டு ஆட்கள் வண்டியில் நின்று நாதமொலிக்கவும், பார்ப்போர் மனதைக் கவரும்படியாகச் சவாரிசெய்து கொண்டுபோகப் பார்த்தவர்கள், "யாரோயிவன்! மிக்க வழகுவாய்ந்தவன்! நல்ல சம்பத்துடையவன். வெகு உல்லாசமாய்ப் போகிருன். முன்சன்மத்தில் நல்ல புண்ணியஞ் செய்தானுக்கும். இவனும் மனிதனே. இவன் வண்டியின் முன்னே ஓடுகிறவர்களும் மனிதர்களே. ஒருகவளம் அன்னத்திற்கு காற்றிலகப்பட்ட பஞ்சுபோலப் பறக்கும் நாமும் மனிதர்களே. ஆகா! என்ன வித்தியாசம் பதவீப்பூர்வ புண்ணியானும் என்று சொல்லுகிறபடி இவையெல்லாம் சன்மாந்திர புண்ணிய பாவத்திற்குத் தக்கபடியிருக்கின்றன' என்று சொல்லுகிருர்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் யாராவது சன்மாந்திரத்தைக் குறித்து சாஸ்திர மூலமாயாவது அல்லது குருக்கள் மூலமாயாவது அல்லது தங்கள் சொந்த யுக்திகளாலாவது ஆராய்ந்து அறிந்தவர்களா? அல்ல. அப்படியிருந்தும் சன்மாந்திரம் உண்டென்னும் நம்பிக்கை அவர்களுக்கு ஒன்றையும் விசாரியாமலே ஏற்பட்டிருந்ததலால் சன்மாந்திர அனுபவம்பெற்ற ஜீவன் உள்ளிருந்து உணர்த்த அவர்கள் சொல்லுகிருர்களென்று நாம் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது.

சன்மாந்திரத்தைக் குறித்துக் கடைசியாக ஒரு சங்கதி சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு மனிதன்

தேக அசௌக்கியமுற்று மிகவுங் கஷ்டப்பட்டுத்தேறி யபின், 'ஐயா? நான் அந்தக்கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டு மிகவும் வருத்தமெய்தி மாணுவஸ்தைப் பட்டேன்' என்று சொல்லுகிறான். மாணுவஸ்தை யை அதற்குமுன் அம்மனிதன் அனுபவித்திருந்தாலல் லாமல், அவ்வவஸ்தை யின்னதென்று அவனுக்கெப் படித் தெரியும்? முன்சன்மமில்லாத பட்சத்தில் அவன் மரண மடைந்தது எப்போது? முன்னும் பின்னு மில் லாமல் ஒரே சன்மமுளதானால் ஒரு மரணந்தானே யு ண்டு. அவ்வொரு மரணத்தை யடைந்தபின் அதனு டைய அவஸ்தானுபவத்தைச் சொல்ல மனிதன் எங் கே? அவ்வவஸ்தானுபவத்தைக் கூற மனிதன் இருப் பதுகொண்டு, முன்சன்மமிருந்திருக்க வேண்டுமென் றும், அச்சன்மத்தைவிட்டு நீங்குங் காலத்துண்டான மரணத்தின் அவஸ்தையை யனுபவித்த ஜீவன் உள்ளி ருந்து உணர்த்த, மனிதன் மாணுவஸ்தைப்பட்டேனெ ன்று கூறுவதை நாமெல்லோரும் ஆட்சேபனையில்லா மல் ஒத்துக்கொள்ளுகிறோம். இவ்வாறு யோசிக்கின் சன்மாந்தர முண்டென்பதை ஸ்தாபிக்க அநேக அனு பவ விஷயங்களிருக்கின்றன. இவையெல்லாம் பறப் பற்று நிதானித்து உற்றுநோக்குவோர்க்கு புலப்படும். பிரபுவே நான் கூறுவது சரிதானோ?"

"தாங்களிப்போது சொல்லியதால் சன்மாந்தர முண்டென்றும் அவைகளிற் செய்த புண்ணிய பாப கர்மங்களுக்குத் தக்கவாறு சுக துக்கங்களுண்டாகின் றனவென்று மறிந்தேன். இப்போது ஒரு சந்தேக முண்டாகிறது. அதென்னவெனின், முன்சன்மங்க ளில் நாமெவ்வாறிருந்தோமென்று இப்போது ஏன் அறிய முடியவில்லை?"

"பிரபுவே! அது ஓர் மறதியேயாம். அது எத்தோன்ற தெனின், சொல்லுகிறேன் கேளுங்கள். இந்தசன்மத்தில் நம்முடைய தாய் தந்தையர்கள் சில வருஷங்களுக்குமுன் இறந்து விட்டார்களென்பது நமக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயம். ஆனால் நம்முடைய சொப்பனத்தில் அவர்களைக்காணும்போது அவர்கள் முன்னமேயே இறந்துவிட்ட சங்கதி நமக்கு ஞாபகத்திற்கு வராமல், நாம் அவர்களுடன் கலந்து பேசி உண்டு களிக்கிறோமே அதென்ன? எந்த மனமானது சாக்கிரத்தில் நமது தாய்தந்தையர்களை யிறந்து விட்டார்களென்று அறிந்ததோ, அதே மனந்தானே சொப்பனத்திலுமுள்ளது. ஏன் அறியவில்லை? ஓர் தேகத்தில் சாக்கிராவஸ்தாசகிதமாய் நின்று ஓர் விஷயத்தை யறிந்த மனமானது அத்தேகத்தின் கண்ணே மற்றோர் அவஸ்தையாகிய சொப்பனத்தை யடையும்போது முன்னவஸ்தையிலறிந்ததை மறந்து விடுமாயின், முன்சன்மத்தில் வேறுதேகத்தை யடைந்திருந்தபோது நடந்த சங்கதிகளை எப்படி மறவாமல் அறியமுடியும்? முடியாது. ஆனால் மனதினுடைய சொரூப நிலையை நன்றாய் அறிந்து ஆத்மானுபவம்பெற்ற திரிகால ஞானிகள் சன்மாந்தரங்களில் நடந்ததை யறிவார்கள். ஏனையோர் அறிவது கஷ்டம்."

"சுவாமிகளே! தாங்கள் கூறிய தொக்கும். நாமெடுக்கும் சன்மங்களுக்கும் அவைகளிலடையும் சுக துக்கங்களுக்குங் காரணம் நம்முடைய கர்ம மானால் பகவானால் நாமடையும் பலனென்ன? அவரைத் துதிப்பானேன்?"

"பிரபுவே! கேளுங்கள். உங்கள் கேள்விகளெல்லாம் மிகவும் ஒழுங்காயிருக்கின்றன. அநித்தியமான

வைகளை நித்தியமென மருண்டு துன்பத்தையே சுக மென மயங்கி யோடியலையும் மனதினுடைய சங்கற்ப ரூபமான ஆசையே கருமத்திற்கு ஆதிகாரணமாக நின்று நமக்குப் பிறவிகளைக் கொடுக்கின்றன. ஒவ்வொரு பிறவியிலும் நம்முடைய மனமானது புதிதான ஆசைகளைச் சேர்த்துக்கொண்டு கர்மத்தை விர்த்தியாக்குகிறது. அதனாலாசையுற்றதை யனுபவிக்க மேன்மேலும் சன்மங்களுண்டாகின்றன. சன்ம விர்த்திக்குக் காரணமான உலகவாசையில் மனம் பற்றாதிருக்குமாயின் சன்மங்கள் விர்த்தியாகா. ஆனால் அனாதிகாலமாய் நம்முடைய மனதிற்கு எதையும் பற்றுவதே சுபாவமான தொழிலாய் விட்டபடியால், அது அத்தொழிலை விடுவது கஷ்டம். அது பற்றுந்தொழிலைச் செய்யவும் வேண்டும், நமக்கு சன்மங்கள் விர்த்தியாகாமலிருக்கவும் வேண்டும். இதற்கென்ன யுக்தி? மனமானது எதை ஆசை கொள்ளினும் அதையடையும் வலியுள்ளது. ஆதலால் அநித்தியமாயும் அல்லல் நிறைபப்பெற்றதாயு முள்ள வுலகத்தின்கண் நாட்டம் வைத்த மனதை மெள்ளத்திருப்பி நித்தியானந்த சொரூபியான பகவானைப் பற்றும்படி செய்துவிட்டால் சன்மம் விர்த்தியாகாமல் குறையும். ஏனெனின் மனம் எதைப்பற்றி யாசையுற்றதோ அதைத்தானே யடையும். பகவானைப்பற்றி பக்திசெய்தால் பகவானைத்தானே யடையவேண்டும். பகவானிடத்து ஆசை அதிக தீவரமாய்ப் பற்றப்பற்ற நாளடைவில் சன்மமேயில்லாமல் துன்பம் நீங்கி நித்திய பேரின்பத்தை யடையலாம். துக்கமயமான உலகத்தில் பற்றுண்டானால் துக்கமே உண்டாகிறது. சனன மாணத்தைக் காட்டிலும் பெருந்துக்கம் வேறுளதோ? இத்தகைய உலகத்தில் நிராசையுற்று பகவானைப் பற்றினால் அவ

ரிடத்துள்ள நித்திய பேரின்பத்தை அவர் கொடுக்கிறார். இதுதான் அவரால் நாமடையும் பலன். அப்பலனையடைய அவரிடத்துச் சதா நம்முடைய மனம் பற்றியிருக்குமாறு அவரது அனந்த கலியாணகுண விசேஷங்களை மனதால் தியானித்து வாயாரப்புகழ்ந்து நாம் துதிப்பது."

"தற்காலத்தில் எனக்கு நேரிட்டிருக்கும் துன்பத்தை நீக்கி இன்பத்தைக் கொடுக்க வெழுந்தருளிய எனது குரு மூர்த்தமே! சதா சஞ்சலித்துக்கொண்டிருக்கும் மனதை பகவானிடத்து நிறுத்துவதெப்படி?"

"சங்கற்பமே சொரூபமாய் ஓடியலையும் மனதை பகவானிடத்து நிறுத்துவது கஷ்டமாயினும் அப்பியாசத்தால் சாதிக்க முடியும். மனதை யோரிடத்து நிலைத்து நிற்கச்செய்யும் அப்பியாசமே யோகமாம். பகவானிடத்து மனதை யர்ப்பணஞ் செய்யும் யோகம் பக்தி யோகமெனப்படும். இந்த யோகத்தைச் செய்ய விரும்புவோர் தனியே ஓர் அறைவைத்திருப்பது நல்லது. அந்த அறையில் நித்திரை செய்யக்கூடாது. அதை மிகச் சுத்தமாய் வைக்கவேண்டும். ஸ்நானஞ் செய்யுமுன் அவ்வறைக்குள் போகக்கூடாது. எப்போதும் நல்ல மணமுள்ள புஷ்பங்களை அவ்வறையில் வைத்து; காலை மாலையில் வாசனைத் திரவியங்களைக் கொளுத்துதல் மிகவும் நலம். இன்னும் அதில் பார்த்தவுடன் பகவானுடைய ஞாபகத்தை யுண்டுபண்ணவல்ல அழகான படங்களை வைப்பது சிலாக்கியம். அன்னிய ரொருவரும் அதனுள் போகாதிருப்பது உத்தமம். ஆனால் அதை வைத்திருக்கும் யோகியின் எண்ணத்தையும் மனோபாவத்தையு முடையவர்கள் மாத்

திரம் போனால் நஷ்டமில்லை. அவ்வறையில் நுழைந்தவுடன் அசுத்தமான எண்ணங்களையும் பொறாமைக் குணங்களையும் விட்டுவிடவேண்டும். பிறகு உட்கார்ந்து பகவானைத் துதிக்கவேண்டும். இப்படியே தினஞ் செய்யவேண்டும்.

இப்படி தினந்தோறும் அப்பியாசித்து பக்தியிற் பழகவேண்டும். இதைச் செய்யாமல் பிறர் மதிக்க வித்தை கற்று பலனென்ன? உயர்குலத்திற் பிறந்தென்ன? எவ்வளவு அறிய பெரிய விஷயங்களை யறிந்தும் அனுபவமில்லாமல் பேசுவதில் பயனில்லை. வயதில் பெரியவராயும் நால்வேத பாராயணம் செய்தவராயு மிருத்தலே போதாதெனக் காட்டவோ, வேதாந்த சாஸ்திர உண்மை யறிந்த அனுபவிபோல பார்த்தவையெல்லாம் பத்மநாபனே யென்று நம்பிய பாலகனான பிரகலாதனுக்குப் பரந்தாமன் பரமபதந் தந்தருளினான். உயர்குலத்திற் பிறந்து வித்தையைப் படித்து விட்டதினாலேயே பயனில்லையெனத் தெரிவித்தற்கோ, பஞ்சம குலத்தில் திருநாளைப் போவாரென்னும் நந்தன் தோன்றினான். வாய்ப்பேச்சில் இலாபமில்லை, உலகப்பற்றறுத்ததை யனுபவத்தில் காண்பிப்பதே சிலாக்கியமென தெளிவித்தற்கோ, கானகமே திரிந்து கடுங்கொலையே புரிந்து வாழ்ந்த கண்ணப்பனுக்கு முக்கண்ணன் முத்தியளித்தனன். பொறுமையுடன் தினந்தோறும் சிறிது நேரம் தனியே யுட்கார்ந்து, உலகம் எத்தன்மைத்து? நாம்யார்? பகவானது அருள் எப்படி விளங்குகிறது? என்று துன்பம் நீங்கி இன்பம் பெறவேண்டுமென்னு மாசையுள்ளவர்கள் ஆராயப்புகுதல் வேண்டும். மதவிஷயமாய் நமக்கென்ன தெரியப்போகிறது? குருவொருவரு மில்லையேயென்று சந்தேகிக்க

வேண்டாம். உலக வியாபாரத்தைச் சிறிதுநேரம் தள்ளிவைத்து உண்மையில் ஆசையுட னுட்கார்ந்துயோசிக்க வாரம்பித்தால், எள்ளிலெண்ணெய்போ லெங்கும் பரிபூரணமாய் நிறைந்தோங்கும் அருளே திருமேனியாயுடைய பெருங்கருணை வள்ளல் சும்மாயிருப்பாரோ? தத்துவம் அறியவேண்டி தினமும் தன்னந்தனியனு யுட்கார்ந்து பழகி அதுவே தவமாகி யொழுகின், அநேக பக்தர்களுக்கு உபதேசித்தருளிய முக்காலமறிந்த முகுந்தன் குருமூர்த்தமாய் வாரானோ? பகவானது சொரூபத்தையும் விசித்திர மகிமையும் அறிவதே நமக்குத் தொழில், அதனாலடையும் ஞானமே நமக்குப் பொருள், அதுவே நமக்கு இன்பம், வேறெதையும் நாடிடோமென்று ஊக்கமுட னுட்கார்ந்துழைக்கும் பக்தனுக்கு பரந்தாமன் உண்மை பகராது போவானோ?"

என்று இராமபக்தர் கூறியபோது சந்திரசேகரர் கண்களிலிருந்து ஆனந்த மேலீட்டலால் முத்தென நீர்சொரிந்தன. சுபாவத்தில் அவர் தெய்வபக்தியுள்ள பிரபு. இராமபக்தர் வாக்கியத்தால் அவருக்கு அம்மாதிரி உண்டாகியது. பிறகு பிரபு பக்தரை துதித்து தன்னுடன் இன்னும் சிலநாள் இருக்கும்படி அவரை வேண்டிக்கொண்டனர். புத்திரனை யிழந்த பிரபுவினுடைய துக்கம் இராமபக்தர் உபதேசத்தால் மாறிவிடாதோ? ஆதலால் வேண்டிக்கொண்டனர்.

---

குறிப்பு.—இம்மாதிரி சத்விஷய சம்பாஷணைகள் அநேகம் சுந்தரி மனோகரன் என்னும் கதைப் புத்தகத்திலடங்கியிருக்கின்றன.

---

# தாயுமானவர் பாடல்.

## புதிய பதிப்பு.

அகண்ட பரிபூரண சச்சிதானந்த வடிவமாயுள்ள சொரூப நிலையை மௌன சற்குரு கடாட்சத்தால் அடையப்பெற்ற ஸ்ரீ தாயுமானசுவாமிகள் உலகுய்ய வுகந்தருளிய பாடல்கள், படிப்போருடை மனதையும், கேட்போரது சிந்தையையும் செவியையும் பிணிப்பதாயும், உள்ளுந்தோறும் உள்ளத்தை உருக்குவதாயும் புருஷார்த்தங்களை புத்தியில் அமையும்படி புகட்டுவதாயுமுள்ளன வென்பது பெரும்பாலர் அறிந்தவிஷயம். பவத்துன்பத்தை யகற்றி பரலோக சாதனமாயுள்ளவைகளைக் கைக்கொண்டொழுக விருப்பமுள்ளவர்கள் சீக்கிரத்தில் தாங் கோரியதற்கு மேம்பட்ட நித்திய பேரின்ப பதவியை எளிதில் அடைவதற்கு ஓர் இரகசியமான நெறியை தாம் குருவினிடத்துக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து அனுபவத்தில் கண்டு ஆனந்தித்தவாறு, எல்லோரும் அவ்வழியை யனுசரித்து நித்திய சுகத்தை அடையவேண்டுமென்னும் அருளுடன் தாயுமானவர் பலவிடங்களில் அடிக்கடி வற்புறுத்திக் கூறிய ஓர் அரிய பெரிய வொப்பற்ற விஷயத்தை, நமது ஆரிய சகோதரர்கள் மேற்படி பாடல்களைப் படிக்கும் போது தவறாமல் கவனிக்கும்படியாக ஓர் நூதன ஏர்பாடுசெய்து இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. அவ்வரிய பெரிய விஷயத்தை ஆங்காங்கு பாடல்களில் எடுத்துக் காட்டியிருப்பதுடன் விசேஷமாக அதைக் குறித்து எல்லாரும் அறியும் வண்ணம் தெளிவாக எழுதப்பட்ட ஓர் அத்தியாயத்தையும் புத்தகவாரம்பத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதுகாறும் "தாயுமானவர் பாடல்" என்னும் புத்தகம் அநேக பதிப்புகளாக வெளிவந்திருப்பினும், தாயுமானவர் கருத்து, அவர் தெய்வம், அவர் நிஷ்டை, அவர் கொள்கை, அவர் உபதேசம் ஆகிய இவைகளை, பாடல்களுக்கு உரையில்லாமலே, ஆரிய பக்த சிகாமணிகளுக்கு அறிவிக்கும் நல்ல மூல புத்தகம் இது வொன்றேயாம். இதன் விலை அணா. 12.

---

# சுகர் கைவல்லியம்.

இது இந்து மதாபிமானிகளுக்கு இன்றியமையாத நூல். சுகப்பிரம்ம ரிஷிக்கும் ஜனக மகாராஜனுக்கும் தத்துவ விஷயமாய் நடந்த சம்பாஷணையை யாவரும் படித்தறிந்து உய்யும் வண்ணம் எளிய நடையில் தமிழ்ச் செய்யுள்களாக எழுதப்பட்டது. மிகச் சிறந்த வேதாந்த சாஸ்திரப் பயிற்சியில் அவாவுள்ளவர்களுக்கு மிக்க உபயோகமான வேதாந்தசார சங்கிரகமெனக் கூறத்தகுந்தது. உலகத்திலிருந்தும் உலகப் பற்றுச் சிறிதுமின்றி நித்திய முக்தர்களாய் வாழ்ந்த இரண்டு பெரிய உத்தம ஞானிகளின் சம்பாஷணையாதலால், இச்சுகர்கைவல்லியமென்னும் புத்தகத்தைப் பன்முறை சிறப்பித்துக் கூறவேண்டியது வீணென விடப்பட்டது. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு இரண்டு அணா விலையுள்ள சிறிய புத்தகமாயினும் பெரிய விஷயங்களடங்கியிருப்பதால், சிறியோர் பெரியோர் யாவருக்கும் ஓர் பெரு நிதிபோன்றதென தெரிவிக்கவேண்டியது மாத்திரம் கடமையாகும்.

CHIDAMBARANATHA MUDALIAR

# ஜன்மாந்திரம்

அல்லது

## இராமதாசர் உபதேசம்.

கடவுள் உண்டென்பதும், அவரால் சிருஷ்டிக்கப்பட்டது உலகமென்பதும், மனிதர்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்கு அவரவர் வினை காரணமென்பதும், வினையே பந்தம் அதன் ஒழிவே முத்தியென்பதும், சீவர்களுக்கு முன்னும் பின்னும் சன்மங்கள் உண்டென்னும் நம்பிக்கையை யாதரவாகக் கொண்டெழுந்த கொள்கைகள். சிறிது யோசிக்கின் இதனுண்மை விளங்கும். ஆகையால் ஜகஜீவபரங்களின் உண்மையறிய விரும்புவோர், முன்னும் பின்னும் சன்மம் உண்டென்பதற்குப் போதுமான நியாயங்களை விசாரித்துத் தெளியவேண்டும். விசாரணைகளிலெல்லாம் மேம்பட்ட இச்சன்மாந்திர விசாரணையை ஒவ்வொருவரும் ஆரம்பத்தில் செய்தாகவேண்டியது. இதைக் கருதியே இராமதாசர் என்னும் ஓர் ஞானி சந்திரசேகரப் பிரபுவுக்கு வெகு காலங்களுக்குமுன் உபதேசித்தருளிய ஜன்மாந்திர நிரூபணத்தை இப்போது அச்சிடலாயிற்று. எளிய தமிழ் வசன நடையில் எழுதப்பட்டது. விலை அணு. 2.

---

# நாணுஜீவவாத கட்டளை.

## வேதாந்த தத்துவக் கட்டளை.

இவ்விரு புத்தகங்களும்.

**வே**தாந்த விசாரணை செய்யப் புகுவோர் ஆரம்பத்தில் வாசிக்கவேண்டிய அரிச்சுவடி போன்றவை. எடுத்த விசாரணை மேன்மேலும் நன்றாய் நிகழச்செய்ய

பலமான அஸ்திபாரத்தை போடும் நல்ல தத்துவக் கட்டளைகள் வேறில்லாமையால் இவை யிரண்டையுமே சேர்த்து ஒரு புத்தகமாக அச்சிடப்பட்டது. விலை, அணா. $1\frac{1}{2}$.

---

# திருவள்ளுவநாயனார் திருக்குறள்.

இது உலகப்பிரசித்திபெற்ற தமிழ்த் தர்ம சாஸ்திரம். இதைப் படித்து அனுஷ்டிப்பவர்களுக்கு சர்வதுக்கங்களு மொழிந்து நித்திய பேரின்ப பதவியை யடையச் செய்யும் வலியுள்ள சிறந்த நூல். நன்னெறியை நாடும் நானாவருணத்தார்களும் பேதமின்றி பேராவாவுடன் அனவாதமும் படிக்கத்தகுந்தது இது ஒன்றேயாம். ஆண் பெண் சிறியோர் பெரியோர் யாருக்கும் உபயோகமானது. ஆசிரியர் திவ்ய சரித்திரமும் திருவள்ளுவ மாலையும் சேர்ந்தது. உயர்ந்த வெண்மையான கிளேசு காகிதம். விலை, அணா. 6.

---

முக்கிய கவனிப்பு:— மேற்கண்ட புத்தகங்களும் இன்னும் வேறு புத்தகங்களும் வேண்டுபவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளலாம்.

மானேஜர்,
திராவிட புத்தக டிபோ,
நெ. 52. பூவிருந்தவல்லி ரோட்,
பார்க் டவுன் போஸ்டு, **மதராஸ்.**